தேதி:- 30-01-2023 அசல் வழக்கு எண்.148/2010 பி.சா.4 (முத்துராமலிங்கம்)

வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை:-

1ம் வாதி முத்துலெட்சுமி ஆறுமுகம்பிள்ளையின் மகள் என்று சொன்னால் சரிதான். ஆறுமுகம்பிள்ளையின் சகோதரி தங்கத்தம்மாள் எனது தகப்பனாரின் முதல்தாரம் ஆவார். ஆறுமுகம்பிள்ளையின் குடும்பத்தார்களை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் அவ்வளவாக தெரியாது. தாவா 3ம் லக்கச் சொத்தை வழக்கு நிலுவையில் இருக்கும் விபரம் தெரிந்து தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். 2ம் வாதி சாந்தி 1999ல் திருமணமானது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. நான் தாவா 8ம் லக்கச் சொத்தை கிரையம் வாங்கும் போது பெண்மக்களிடம் இருந்து கிரையம் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். 2ம் வாதியை கட்டுப்படுத்தி ஆறுமுகம்பிள்ளை கிரையம் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் ஞாபகமில்லை. தாவா 8ம் லக்கச் சொத்தை 1998ம் வருடம் கிரையம் வாங்கினேன். அன்றைய தேதியில் இருந்து வழக்கு தாக்கல் செய்த காலம் வரை 12 வருடங்கள் முடியவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா 8ம் லக்கச் சொத்தை பொறுத்து மட்டும் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா 8ம் லக்கச் சொத்தை 2ம் வாதியை கட்டுப்பத்தி கிரையம் பெறாததால் தாவா 8ம் லக்கச் சொத்தை பொறுத்து நான் கிரையம் வாங்கியது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா 8ம் லக்கச் சொத்தை பொறுத்து வாதிகளுக்கும் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா 8ம் லக்கச் சொத்தை நான் முகமதுரியாஸ் என்பவருக்கு காலிமனையிடமாகத் தான் வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா 8ம் லக்கச் சொத்து 1998ம் வருடத்தில் இருந்து காலிமனையிடமாகத் தான் இருந்தது என்றும், என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா 8ம் லக்கச் சொத்தை பொறுத்து வாதிகளுக்கு வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

4, 5, 6 பிரதிவாதிகள் தரப்பு வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக் கொள்கின்றனர்.

7, 13 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ளனர்.

18 முதல் 22, 23 முதல் 27 பிரதிவாதிகள் குறுக்குவிசரணை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ளனர்.

3, 8, 9, 16, 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.